## <u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

O.S. No.776/2023 Date : 22-07-2025

பெயர் : விஸ்வநாதன் வா.சா. 1

சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார். என்ன பரிகாரம் கோறி வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் பிரதிவாதி எனக்கு அடிக்கடி எனக்கு தொந்தரவு செய்து வந்ததால் இவ்வழக்கு தாக்கல் செய்தேன். தாவா சொத்து விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1249 சதுரடி ஆகும். மேற்படி விஸ்தீரணத்தில் எனக்கு எவ்வளவு சொத்து உரிமையானது என குறிப்பிட்டு சொல்லிருக்கிறேனா என்றால் இல்லை. தாவா சொத்து விவரத்தில் 1249 சதுரடியில் 2/3 பாகம் 833 சதுரடி மனையில் உரிமை கோருவதாக குறிப்பிட்ட நிலையில் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு உரிமை கோருகிறேன் என்றால் முழு சொத்திற்கும் தான் உரிமை கோருகிறேன்.

2, தாவா சொத்தை யாரிடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் லாரண்ஸ் மற்றும் பார்த்திபன் ஆகியோர்களிடம் இருந்து கிரையம் வாங்கினேன். தாவா சொத்தை 2 கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெற்றதாக குறிப்பிட்டேன் என்றால் சரிதான். ஒவ்வொரு ஆவணம் மூலம் எவ்வளவு சொத்து கிரையம் வாங்கினேன் என்றால் 833 சதுரடி மற்றும் 416 சதுரடி கிரையம் வாங்கியுள்ளேன். எனக்கு கிரையம் கொடுத்த லாரண்ஸ் மற்றும் பார்த்திபன் ஆகியோரிக்கு தாவா சொத்து எவ்வாறு உரிமையானது என்றால் சின்னையா மகன் தாஸ் என்பவர் பெயரில் அரசால் பட்டா வழுங்கப்பட்டிருந்தது.

3.எனது கிரையாதாரரான லாரண்ஸ் மற்றும் பார்த்திபன் ஆகியோரின் தகப்பனார் என நான் குறிப்பிட்டுள்ள தாசன் என்கிற தாஸ் என்ற பெயர் கொண்ட நபர் இருவேறு நபர் என்றாலும் இல்லை. அவர் ஓரே நபர் ஆவார். தாஸ் என்கிற தாசன் என்பவர் ஓரே நபர் எடுத்துரைக்க ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளீரா என்றால் தாக்கல் செய்யவில்லை இதன் பின்னிட்டு தாக்கல் செய்வேன். தாஸ் என்கிற தாசன் என்பவர் ஓரே நபர் என குறிப்பிட்டு வருவாய்

துறையினரின் ஏதேனும் ஆவணம் பெற்றுளீரா என்றால் இல்லை. நான் பெற்ற கிரைய ஆவணத்திற்கு உண்மைதன்மை ஆவணம் பெற்றுள்ளேன். எந்த ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் அரசிடமிருந்து பட்டா வழங்கப்பட்டதன் அடிப்படையில் பட்டாதாரரின் வாரிசுதாரார்களிடம் இருந்து சொத்தை கிரையம் பெற்றேன்.

4.மேற்படி பட்டா ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்திருப்பேன். தாவா சொத்தை என்ன வகைப்பாடு சேர்ந்தது என்றால் நான் கிரையம் பெறும்போது சர்க்கார் மனையாக இருந்தது. மேற்படி சர்க்கார் மனைக்கு எவ்வித பட்டாவும் வழங்கப்படவில்லை என்றாலும் சரியல்ல பட்டா வழங்கப்பட்டிருந்தது. மேற்படி பட்டா எந்த காலக்கட்டத்தில் வழங்கப்பட்டது என்றால் 2020ம் ஆண்டு வழங்கப்பட்டது. மேற்படி பட்டா ஆவணத்தை தவிர தாவா சொத்து தொடர்பாக வேறு ஏதேனும் ஆவணத்தை பார்த்து கிரையம் பெற்றீரா என்றால் வாரீசு சான்றிதழ் மற்றும் வாரீசுகளின் ஆதார் அடையாள அட்டை பார்த்து கிரையம் பெற்றேன். மேற்படி வாரீசுதாரர்களின் அடையாள அட்டையான வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அடையாள அட்டை ஆகியவற்றில் எந்த விலாசம் குறிப்பிட்டுள்ளது என்றால் வேம்புளியம்மன் கோயில் தெரு என குறிப்பிட்டிருந்தது இதர விலாச விவரங்கள் தெரியவில்லை.

5.மேற்படி பட்டாதாரரின் வாரீசுகள் பெற்றிருந்த ஆதார் அடையாள அட்டை ஆகியவை தாவா சொத்தின் விலாசத்திற்கு வழங்கப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து நான் கிரையம் பெறும்போது காலி மனையாக இருந்தது என்றால் ஆமாம் அதில் ஒரு அடி உயரத்தில் சுவர் மட்டும் இருந்தது. தாவா சொத்தை நான் கிரையம் பெற்ற பின்னிட்டு சுவாதீனம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல எனது சுவாதீனத்தில் தான் இருந்தது. தாவா சொத்து நான் கிரையம் பெறுவதற்கு முன்பாக யார் அனுபவத்தில் இருந்தது என்றால் தாஸ் என்கிற தாசன் என்பவர் அனுபவத்தில் இருந்தது. தாஸ் என்கிற தாசன் தாவா சொத்தில் தனியாக வசித்து வந்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு

நேரடியாக தெரியாது அவரின் வாரீச சொல்லி தான் தாஸ் என்கிற தாசன் அனுபவம் செய்து வந்த விவரம் தெரியும். தாவா சொத்தானது அரசுக்கு பாத்தியமான சொத்து என்றாலும் அதற்கு எவ்வித ஆவணமும் கிடையாது என்றாலும் தாஸ் என்பவர் தாவா சொத்தை 1997 ஆண்டு ரஹிம் என்பவருக்கு பதிவுசெய்யப்படாத கிரைய ஆவணம் மூலம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் நான் மேற்படி தாஸ் என்பவரின் வாரிசுகளிடம் விசாரித்தபோது மேற்படி தாஸ் எவ்வித கிரைய ஆவணமும் எழுதிகொடுக்கவில்லை என தெரிவித்தனர். மேற்படி தாவா சொத்தை நூர் முகமது கிரையம் பெற்றுள்ளார் என்றாலும் அந்த பதிவு செய்யபடாத கிரைய ஆவணத்தில் தாஸ், அவரது மனைவி பொன்னியம்மாள், அவரது மகன்கள் லாரண்ஸ், பார்த்திபன், பாபு ஆகியோர்கள் கையொப்பம் செய்து கொடுத்த விவரம தெரியுமா என்றால் அதுபோலியாக கையொப்பம் செய்த ஆவணம்.

6. 1997 ஆம் ஆண்டு தாவா சொத்தில் நூர்முகமது என்பவர் வசித்து வந்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் தற்போது பிரதிவாதிகள் வசித்து வருகிறார் என்றால் இல்லை. தாவா சொத்தில் பிரதிவாதிகள் அனுபவம் செய்ததில் நான் தகராறு செய்ததால் பிரச்சனை ஏற்பட்டதால் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நான் சுத்தம் செய்யும்போது பிரதிவாதிகள் தான் பிரச்சனை செய்தார்கள்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram